**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 103 of 2025**

**Prosecution Witness : PW1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ராமன் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(Accused Present)**

**Dated. 17.06.2026**

**முதல் விசாரணை**

நான் திருவெறும்பூர் மது அமலாக்கப்பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.05.2025 ம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளர் தனலெட்சுமிடன் நானும், தலைமை காவலர் 479 மோகன் ஆகியோருடன் மதுவேட்டை ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி உட்கோட்ட சரக பகுதியில் கண்காணித்த போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட அழகேசன் த/பெ. சப்பானி, 73A, வடக்கு தெரு புள்ளம்பாடி, லால்குடி, திருச்சி என்பவர் புள்ளம்பாடி பைப்பாஸ் அருகில் அரசு அனுமதியின்றி 180 ml அளவுடைய orion பிராந்தி 26 பாட்டில்கள் வைத்திருந்தவர், எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரித்தபோது, அவர் மதுபானத்தை அரசு அனுமதியின்றி சில்லறை விற்பனைக்காக வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டார். அவரை சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 11.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தார். பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் எங்கள் முன்னிலையில் 180 ml அளவுடைய orion பிராந்தி 26 பாட்டில்களை காலை

11.15 மணியளவில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், மோகன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். பின்பு சம்பவ இடத்திலேயே கைப்பற்றப்பட்ட 180 ml அளவுடைய orion பிராந்தி 26 பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து எங்கள் முன்னிலையில் சிறப்பு உதவி ஆய்வாளர் காலை 11.40 மணியளவில் 26 மதுபான பாட்டில்களை கொட்டி அழித்தார். அந்த அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த அழித்தல் மகஜரில் நானும், மோகன் என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம். பின்பு எதிரியுடன் காலை 13.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 112/2025 U/s. 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. நாங்கள் அதற்கு உதவியாக இருந்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.1/அ.சா.1** ஆகும். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.2/அ.சா.1** ஆகும். அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து **அ.சா.ஆ.3/அ.சா.1** ஆகும். அந்த அழித்தல் மகஜர் **அ.சா.ஆ.4/அ.சா.1** ஆகும். சிறப்பு உதவி ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் இரண்டிலும் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் எத்தனை மணிக்கு கையொப்பம் செய்தேன் என்றால் காலை 11.15 மணிக்கு கையொப்பம் செய்தேன். கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் கையால் எழுதப்பட்டிருந்ததா என்றால் இல்லை, தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது

என்றாலும், இந்த வழக்கு புள்ளியியல் கணக்கிற்காக எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.17 17:49:02 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 103 of 2025**

**Prosecution Witness : PW2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:** தனலட்சுமி | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated. 17.06.2026**

**முதல் விசாரணை**

நான் திருவெறும்பூர் மது அமலாக்கப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.05.2025 ம் தேதி நானும், தலைமை காவலர் 501 ராமன் மற்றும் தலைமை காவலர் 479 மோகன் ஆகியோருடன் மதுவேட்டை ரோந்து அலுவலாக புறப்பட்டு இலால்குடி உட்கோட்ட சரக பகுதியில் கண்காணித்த போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட அழகேசன் த/பெ. சப்பானி, 73A, வடக்கு தெரு புள்ளம்பாடி, லால்குடி, திருச்சி என்பவர் புள்ளம்பாடி பைப்பாஸ் அருகில் அரசு அனுமதியின்றி 180 ml அளவுடைய orion பிராந்தி 26 பாட்டில்கள் வைத்திருந்தவர், எங்களை பார்த்ததும் ஓட முயற்சி செய்தவரை பிடித்து நான் விசாரித்தபோது, அவர் மதுபானத்தை அரசு அனுமதியின்றி சில்லறை விற்பனைக்காக வைத்திருப்பதாக ஒப்புக் கொண்டார். அவரை காலை 11.00 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்தேன். பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வராததால் உடன் வந்த போலீசார் முன்னிலையில் 180 ml அளவுடைய orion பிராந்தி 26 பாட்டில்களை காலை 11.15 மணியளவில்

கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜரில் மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். பின்பு சம்பவ இடத்திலேயே கைப்பற்றப்பட்ட 180 ml அளவுடைய orion பிராந்தி 26 பாட்டில்களை அழித்தல் மகஜர் தயார் செய்து மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் காலை 11.40 மணியளவில் 26 மதுபான பாட்டில்களை கொட்டி அழித்தேன். அந்த அழித்தல் மகஜரில் மேற்படி சாட்சிகளின் கையொப்பம் பெற்றேன். பின்பு எதிரியுடன் காலை 13.00 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 112/2025 U/s. 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5/அ.சா.2** ஆகும். பின்னர் பட்டியல் சாட்சிகளான 1,2 ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எனது விசாரணை முடித்து எதிரியின் மீதான குற்றத்திற்கு போதிய ஆதாரம் இருந்ததால் எதிரியின் மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment ) act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தேன்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

நான் கைபற்றுதல் மகஜரில் சாட்சிகளிடம் சம்ப இடத்தில் வைத்து கையொப்பம் பெற்றேன் என்றால் சரிதான். கைபற்றுதல் மகஜரில் தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது கையால் எழுதப்பபட்டதா என்றால் சம்பவ இடத்தில் வைத்து கையால் எழுதிவிட்டு பின்னர் நிலையம் வந்து தட்டச்சு செய்யப்பட்டது. சம்பவ இடத்தில் ஒரு முறையும் காவல் நிலையத்தில் ஒரு முறையும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை அழிப்பதற்காக எந்த உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்றேன் என குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான பாட்டில்கள்

நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவில்லை என்றால் வேதியல் பகுப்பாய்விக்கு அனுப்பப்படவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் இந்த வழக்கு புள்ளியல் கணக்கிற்காக எதிரி மீது போடபட்ட பொய்யான வழக்கு என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM

Digitally signed by ARUNACHALAM
Date: 2026.06.17 17:49:09 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி